309 - வது பிறந்த நாள்!

# பூலித்தேவரின் வரலாற்றை தமிழ்நிலம் எந்நாளும் போற்றும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!

சென்னை, செப். 2 -

சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவரின் 309 வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "மண்ணின் மானம் காக்க வாழ்ந்த வீரம் செறிந்த பூலித்தேவரின் வரலாற்றைத் தமிழ்நிலம் எந்நாளும் போற்றும்" என புகழாரம் சூட்டியுள்ளார்.



சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவரின் 309ஆவது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

ஆங்கிலேய ஆட்சியை வேரறக் களையப் போர்க் கொடி உயர்த்திய பூலித்தேவரின் 309ஆவது பிறந்த நாள்!

மண்ணின் மானம் காக்க வாழ்ந்த வீரம் செறிந்த அவரது வரலாற்றைத் தமிழ்நிலம் எந்நாளும் போற்றும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்ற தூத்துக்குடி மாநகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டத்தில் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி பெ.கீதா ஜீவன் உரையாற்றினார். உடன் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்த சேகரன்,மாநகர அவைத் தலைவர் ஜேசுதாஸ், மாவட்ட பொருளாளர் சுசி.ரவீந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், துணை மேயர் திருமதி. ஜெனிட்டர் செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் திருமதி. கஸ்தூரி தங்கம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பொது உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டம்: சாந்தலிங்க அடிகளார்

# கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி மாணாக்கர் அருள்நெறி மன்ற 36-ஆம் ஆண்டு தொடக்கம் - முப்பெரும் விழா!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - மு.பெ.சாமிநாதன் பங்கேற்பு!

கோவை, செப். 2-

கோயம்புத்தூர் மாவட்டம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரியில் குமாரதேவர் மாணாக்கர் அருள்நெறி மன்ற 36ஆம் ஆண்டு தொடக்கம், அணி காஞ்சி - தமிழ்மன்றம், நொய்யல் - தமிழ்மன்றம் ஆகிய முப்பெரும் விழாவில் நேற்று முன்தினம் (30.08.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் தமிழ்த் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சோ.நடராசு, வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் க.கதிர்வேல், கல்விசார் இயக்குநர் முனைவர் இரா.சரவணசெல்வன், முதல்வர் முனைவர் சு.சேதுராசன், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கா.திருநாவுக்கரசு, கல்விசார் நிர்வாகி முனைவர் வெ.சுகந்தா, மாண்புசார் செயலர் முனைவர் சி.சுப்பிரமணியம் பேரூர்ப் பேரூராட்சித் தலைவர் ப.அண்ணாதுரை மற்றும் 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் மேதமைசார் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு என்று தமிழ் வளர்ச்சித்துறையின் வாயிலாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், சிறப்புவாய்ந்த தமிழ் நூல்களை படைத்தார். தமிழை தம் உயிர் மூச்சாக கொண்டு வாழ்ந்தார். மேலும், தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சி, தமிழறிஞர்களின் வளர்ச்சினை கருத்தில்கொண்டு, பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள்.

இம்மன்றம் 1988ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரியின் அரசு உதவிப் பெறாப் பிரிவின் மன்றம். கன்னட நாட்டு அரச பதவியைத் துறந்து சாந்தலிங்கப்பெருமானின் அருளாற்றலை அறிந்து சாந்தலிங்கரின் அருட்சீடரானவர் குமாரதேவர் அவர்தம் திருப்பெயரால் இம்மன்றம் அமைந்துள்ளது. இம்மன்றத்தின்கீழ் அரசு உதவி பெறாப் பிரிவின் பி.காம், பி.காம் பி.ஏ, பி.காம் சி.ஏ, பி.காம் ஏப், பி.எஸ்.சி (சி.எஸ்), பி.சி.ஏ, பி.ஏ ஆங்கிலம், பி.எஸ்.சி கணிதம் ஆகிய அனைத்துத் துறைகளும் அடங்கும். ஒவ்வொரு துறை வாரியாக கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நடத்துதல், ஆண்டுதோறும் தொடக்கவிழா, ஆண்டு விழாக்களை நடத்துதல் ஆதியன இதன் முக்கியச் செயல்பாடுகள் ஆகும்.

துறை வாரியாக மன்றங்களை அமைத்துக் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நடத்துதல், ஆண்டுதோறும் தொடக்க விழா, ஆண்டு நிறைவு விழாக்களை நடத்துதல் அரசு உதவிப்பெறாப் பிரிவின் கல்வி சார்ந்த அனைத்துச் செயல்பாடுகளாகிய நாட்டுநலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை, செஞ்சுருள் சங்கம், சாரணர் இயக்கம், விளையாட்டு ஆகிய அனைத்தும் இதில் அடங்கும்.

அணி காஞ்சி தமிழ் மன்றம் கல்லூரியின் அரசு உதவி பெறும் பிரிவு தமிழ்த்துறையினால் உருவாக்கப்பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் மேற்குத் தொடர்ச்சிமலையில் உற்பத்தியாகி காவிரியில் கலக்கும் நதியாகிய நொய்யல்நதியைக் குறிப்பிடும் போது "அணிகாஞ்சிவாய்ப் பேரூர்" எனக் குறிப்பிடுகிறார். அதிலிருந்து அணிகாஞ்சி என்ற பெயர் இம்மன்றத்திற்கு அமைந்துள்ளது. 1953ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மன்றம் 70 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து தமிழ் வளர்க்கும் பணியைச் செய்து வருகிறது. தமிழ்ப் படிக்கும் மாணவர்கள் தங்களுக்குள் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் எனப் பல்வேறு திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கல்லூரியின் அரசு உதவி பெறாப் பிரிவு தமிழ்த்துறையினால் உருவாக்கப்பட்டது நொய்யல் தமிழ்மன்றம் பேரூரில் கல்லூரியை ஒட்டி ஓடிக்கொண்டிருக்கும் நொய்யல் நதியின் பெயர் இம்மன்றத்திற்கு அமைந்துள்ளது. 1988-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மன்றம் 35 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து தமிழ் வளர்க்கும் பணியைச் செய்து வருகிறது. தமிழை ஒரு பாடமாக மட்டும் கொண்டு பயிலும் மாணவர்களில் தமிழார்வம் மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டிகள் நடத்துதல், சொற்பொழிவுகள் நடத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்திருமடமும் கல்லூரியும் எமது பாட்டனார் காலத்துடன் தொடர்புடையது. இருபத்து நான்காம் குருமகாசந்நிதானங்கள் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் எப்போதும் என்னை வாழ்த்தி ஆலோசனைகளை வழங்குபவர். தமிழ் வளர்ச்சிக்குக் கல்லூரி செய்யும் பணிகளுக்கும் தமிழ்வளர்ச்சித்துறை துணை நிற்கும்"என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித்துறை சாதனைகள் குறிப்புக் கையேட்டை அமைச்சர் அவர்கள் வெளியிட்டு, குருமகா சந்நிதானங்களிடம் வழங்கினார்.


இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

"முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படும் அரசு இளையோர்களுக்குக் குறிப்பாக மாணவர்களுக்கான அரசாகச் செயல்படுகிறது. அரசு கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, அதன்வாயிலாக ஊக்கத்தொகை, உதவித்தொகைகள் வழங்கிவருகின்றது. "இந்த கல்லூரியில் நீண்ட காலமாகச் செயல்படும் மன்றங்களாகவும், தமிழுக்காக மூன்று மன்றங்கள் செயல்படுவதையும் இங்குதான் பார்க்கிறேன். கொங்குநாட்டில் தமிழ் வளர்க்கும் அரும்பணியைச் சாந்தலிங்க அடிகளார் கல்லூரி செய்து வருகிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தொடர்ந்து மன்றச் செயலர்கள், இணைச் செயலர்கள், உறுப்பினர்களின் பதவியேற்பும் உறுதி மொழி எடுக்கும் நிகழ்வும் நடைபெற்றன. அமைச்சர் பெருமக்கள் மாணவர்களுக்கு உறுப்பினர் அட்டையை வழங்கிப் பொறுப்பேற்கச் செய்தனர்.

# திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் எனது (இல.பத்மநாபன்) தலைமையிலும், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையிலும் கீழ்கண்ட பட்டியல் படி நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச்செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம், அந்தந்த பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இன்னாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு, கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க., ஒன்றிய, நகர, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் இடங்கள்

**சட்டமன்ற தொகுதி**

**126 மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி,**

நாள் : 03.09.2024 (செவ்வாய்) நேரம் : காலை 10.00 மணி

ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின் பெயர் :

உடுமலைப்பேட்டை மேற்கு ஒன்றியம்,

உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம்,

உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியம்,

தளி பேரூர்

இடம் : கிருஷ்ணகானம் திருமண மஹால், பொள்ளாச்சி சாலை, உடுமலைப்பேட்டை.

நாள் : 03092024 (செவ்வாய்) நேரம் : நண்பகல் 12.00 மணி,

ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின் பெயர் :

மடத்துக்குளம் கிழக்கு ஒன்றியம்,

மடத்துக்குளம் மேற்கு ஒன்றியம், மடத்துக்குளம் பேரூர்,

கணியூர் பேரூர்,

குமரலிங்கம் பேரூர்,

சங்கராமநல்லூர் பேரூர்.

இடம் : அக் ஷரா திருமண மண்டபம், கணியூர் சாலை, சோழாமாதேவி மேடு.

**இல.பத்மநாபன்**

செயலாளர்

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

அண்ணா சாலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்த

# காவல் துறை உதவி ஆணையரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப்.2 -**

**சென்னை அண்ணாசாலை மன்றோ சிலை அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்த காவல்துறை உதவி ஆணையரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:**

சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆணையராக பணியாற்றிவந்த சிவகுமார் (வயது 53) நேற்று முன்தினம் (31.8.2024) பகல் சுமார் 12.45 மணியளவில் சென்னை அண்ணா சாலை மன்றோ சிலை அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்த நிலையில் சிகிச்சைக்காக இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன். காவல்துறை உதவி ஆணையர் சிவகுமார் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சிவகுமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில்

# சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய கட்டடங்கள்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைக்கிறார்கள்!

தஞ்சாவூர் செப்.02-

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும் புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுவிழா நாளை நடைபெற உள்ளது.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை நோயாளிகளின் உதவியாளர்கள் காத்திருக்கும் கூடம் மற்றும் டயாலிசிஸ் சிறப்பு வார்டு ரூ.438.00 இலட்சம் மதிப்பீட்டிலும், அம்மாபேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 75.00 இலட்ச மதிப்பீட்டிலும் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. மேலும், கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் TNHSRP நிதியில் உள் நோயாளர் கட்டண சிகிச்சை பிரிவு கட்டடம் ரூ.33.60 இலட்ச மதிப்பீட்டிலும், பட்டீஸ்வரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் NHM நிதியில் செவிலியர் குடியிருப்பும் கட்டப்பட்டு அதற்கான திறப்பு விழாவும்,

மேலும் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை கதிரியக்க துறைக் கட்டடம் மற்றும் உள்நோயாளிகளின் உதவியாளர்கள் காத்திருக்கும் கூடத்தின் இரண்டாம் தளம் சிறப்பு சிகிச்சை பிரிவு மற்றும் மூன்றாவது தளம் செவிலியர் ஓய்வு கூடம் ஆகிய கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியும் கும்பகோணம், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், நாளை 03.09.2024 காலை 09.00 மணியளவில் நடைபெற உள்ளது.

விழாவில் தஞ்சாவூர் மருத்துவ நலப்பணிகள், இணை இயக்குநர் மரு.என். செல்வகுமார் வரவேற்புரையாற்றுகிறார். மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் தலைமை வகிக்கிறார்.

புதியக்கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் திறந்து வைக்கிறார்.

புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான அடிக்கல்லை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நாட்டுகிறார்.

அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் முன்னிலை வகிக்கின்றனர். மருத்துவ நலப்பணிகள் இயக்குனர் மரு.ஜெய.ராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் தோய் தடுப்பு மருந்து துறை இயக்குனர் தி.ச.செல்வவிநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாக பங்கேற்கின்றனர்.

இவ்விழாவில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.சுதா, மு.சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், எம்.ஹெச்.ஜவாகிருல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி திட்ட பணிகள் இயக்குனர் மு.பாலகணேஷ், கும்பகோணம் மேயர் க.சரவணன், துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை தலைவர் சு.க.முத்து செல்வம், வருவாய் கோட்டாட்சியர் எஸ்.பூர்ணிமா, செயற்பொறியாளர் ஆர்.பிரமிளா, ஒன்றியக்குழு தலைவர்கள் கே.வி.கலைச்செல்வன், காயத்ரி அசோக்குமார், ஷோபா ரமேஷ், தேவி ரவிசந்திரன், சுபா திருநாவுகரசு, சுமதி கண்ணதாசன் ஆகியோர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

விழா நிறைவில் மாவட்ட சுகாதார அலவலர் பா.கலைவாணி நன்றியுரையாற்றுகினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டாக்டர் பொ. பத்மநாபன்**

**செப்டம்பர் 2 (1991)**



**திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "அண்ணா விருது" பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**